## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட சுனாமியால் பிரதேசங்களை பகுதிகளை மீளக்கட்டியெழுப்புதல் செயற்திட்டம் - கூறு "சீ" இன் (வீதிப் புனரமைப்பு மற்றும் புனர் நிர்மாணம்)

### 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டன என்றும்,

(இ) 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்றும், 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக்கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மானிய மற்றும் கடன் உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க மீளளிப்புகளுக்கான விண்ணப்பங்களை உறுதிப்படுத்துவதற்காக நியாயமாக நம்பிக்கையை வைக்கமுடியும் என்றும்,

இரத்துச் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்த ஒப்பந்தத்திற்காக ஒப்பந்தக்காரர் ஒருவருக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 8,932,606 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பண மீதி, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அறவிடப்படாதிருந்தது. இது தொடர்பான செயலாற்றல் முறியின் செல்லுபடிக் காலம் 2009 ஒக்டோபர் 29 ஆம் திகதி காலாவதியாகியிருந்தது. எவ்வாறெனினும், 2011 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறும் செயலாற்றல் முறியினை மீள செல்லுபடியாக்குவதற்கோ அல்லது ரூபா 10,348,007 தொகையான பிடித்து வைக்கப்பட்ட தொகையிலிருந்து நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மிகுதி வேலையினைப் பூர்த்தி செய்வதற்காக உரிய புனரமைப்பு ஒப்பந்தம் 2010 மே 24 ஆம் திகதி ரூபா 176,591,122 தொகையான மதிப்பீட்டுக் கிரயத்தில் மற்றுமொரு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. மிகுதி வேலைகளை மேற்கொள்வதற்காக ரூபா 85,770,162 பெறுமதியான முரண் கட்டளைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தமையால் முதலாவது ஒப்பந்தக்காரர் வேலை செய்யத் தவறியதன் காரணமாக மூல மதிப்பீட்டிற்கு மிகையாக 66% ஆல் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் அதிகரித்திருந்தது.

(இ) களுத்துறை மாவட்டத்தில் 5.04 கிலோ மீற்றர் நீளமான பயாகல – தொடங்கொட வீதி மற்றும் மொல்லிகொட – கொரஸ்துவ வீதி, காலி மாவட்டத்தில் 11.75 கி.மீ. நீளமான பிலான கபராதுவ வீதி மற்றும் கியாரே – கந்துருகஸ்ஹேன வீதி மற்றும் கியாரே – கந்துருகஸ்ஹேன வீதி மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் 7.65 கிலோ மீற்றர்கள் நீளமாக பல்லேமல்ல – பதகிரிய வீதி போன்ற ஏனைய மாகாண வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் செயல்முன்னேற்றத்தினை, செயற்திட்ட முகாமைத்துவ பிரிவில் எழுத்து மூலச் சான்றுகள் இல்லாத காரணத்தினால் கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது.